**அதிக பொறுப்பு கொண்ட பணியிடம் : மாற்றுத்திறன் கொண்டவர்களுக்கு பயிற்சிகளை வழங்க Airtel மற்றும் EFC இடையே புரிந்துணர்வு ஒப்பந்தம்**

- மாற்றுத்திறன் கொண்டவர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்க EFC உடன் கைகோர்த்த முதலாவது Telco நிறுவனம்

இலங்கை இளைஞர் சமுதாயத்தை மேம்படுத்தும் நோக்கில் மிக அர்ப்பணிப்புடன் செயற்படும் வர்த்தக நாமமாக நன்மதிப்பை பெற்றுள்ள Airtel நிறுவனம், மாற்றுத்திறன் கொண்டவர்களுக்கு தொழிற் பயிற்சி வழங்குவதற்கு இலங்கை முதலாளிகள் சம்மேளத்துடன் (EFC) விசேட புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டுள்ளது.

முதலாளிகள் சம்மேளனம் ஊடாக 6 மாத கால பயிற்சியை பெற்ற ஓரளவு பார்வை குறைபாடு கொண்டவரை Airtel நிறுவனம் சேவையில் ஈடுபடுத்தியதன் ஊடாக இந்த செயற்திட்டம் ஆரம்பமானது.

“தொழில்நுட்பத்தின் முன்னேற்றம் மாற்றுத்திறனாளிகளுக்கு அவர்களது முழு திறனுக்கும் அதிகமான அளவை அடைய தனிநபர்களின் திறனுக்கு பங்களிக்க அதிகாரம் அளித்துள்ளது. அத்தகைய நபர்களை ஒரு பணியிடத்திற்கு கொண்டுவரும் சிந்தனை மற்றும் அனுபவத்தின் பன்முகத்தன்மை விலைமதிப்பற்றது.”

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக கருத்து தெரிவித்த Airtel Lanka நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அதிகாரி ஜினேஷ் ஹெக்டே “மாற்றுத்திறனுடன் வாழும் நபர்களை தொழில்நுட்ப வளர்ச்சியின் உதவியுடன் மேம்படுத்தவதற்கு மிகவும் சிறந்த வழிமுறை உண்டு. அதேபோல் அவர்களது திறமைகளை சமூகத்தின் முன் கொண்டு சென்று எதிர்காலத்துக்காக பயன்படுத்த முடியும். முதலாளிகள் என்ற வகையில் மாற்றுத்திறனுடன் வாழ்பவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக அறிந்து அவற்றை தீர்த்து வைக்க வேண்டியது எம் அனைவரினதும் பொறுப்பாகும். அவர்களுக்கு தேவையான ஆற்றலை வழங்குவதன் ஊடாக அவர்களையும் எமது ஊழியர்களாக உள்ளீர்த்துக் கொள்ள முடியும். நிறுவன மற்றும் வியாபாரங்கள் தொடர்பாக புரிந்துணர்வை வழங்குவதற்கும் ஏனையவர்களை போன்று அவர்களது திறமைகளை அறிந்துகொள்வதற்கும் அவற்றை மேம்படுத்துவதற்கும் தொழில்சார் ஒத்துழைப்பை பெறுவதற்கும் இத்தகைய பயிற்சிகள் பாரிய அளவில் உதவுகின்றன. Airtel நிறுவனம் ஊடாக இலங்கை முதலாளிகள் சம்மேளத்துடன் ஏற்படுத்திக் கொண்ட இந்த முயற்சி இலங்கை தொலைத்தொடர்புகள் சேவை வழங்குனர் நிறுவனம் என்ற ரீதியில் இத்தகையை திட்டமொன்றை ஆரம்பித்த முதலாவது நிறுவனம் இதுவென்பதையிட்டு நாம் மகிழ்ச்சியடைகின்றோம்” என கூறினார்.

“ புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட பின்னர் மாற்றுத்திறன் கொண்டவர்களுக்கு செயல்முறை பயிற்சிகள் கொண்ட 6 மாத பயிற்சி செயற்திட்டம் Airtel நிறுவனம் ஊடாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது. பெரும்பாலானவர்களுக்கு அதில் கலந்துகொள்வதற்கும் Airtel நிறுவனத்தின் வர்த்தக செயற்பாடுகளின் பன்முகத்தன்மை தொடர்பாக அறிந்துகொள்ள முடிந்துள்ளது. அத்துடன் வாடிக்கையாளர்களின் வாழ்க்கை முறை தொடர்பாக அறிந்துகொள்வதற்கும் வாய்ப்பு கிடைக்கும். சேவை நிலையத்தில் விரிவான பன்முகத்தன்மையை

கொண்டு செல்வதற்கு Airtel நிறுவனம் பின்பற்றும் செயற்பாடுகள் இதன் மூலம் மேலும் பலமடையும்” என்றார்.

இந்த புரிந்துணர்வு ஒப்பந்தம் தொடர்பாக கருத்து தெரிவித்த இலங்கை முதலாளிகள் சம்மேளத்தின் பணிப்பாளர் நாயகமும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான கவிஷ்க வீரசிங்க “சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட முதற்தர தொலைத்தொடர்பு நிறுவனமான Airtel நிறுவனத்துடன் இத்தகைய புரிந்துணர்வுக்கு வந்தமை எமக்கு கிடைத்த கௌரவமாகும். மாற்றுத்திறன் கொண்டவர்களின் நலனுக்காக அந்த நிறுவனம் பாரிய தொழிற்பயிற்சியை வழங்க முன்வந்தமை ஊடாக முதலாளிகள் வலையமைப்பில் அவர்களது பங்களிப்பு உயர்ந்து நிற்கின்றது. சேவை வழங்குனர்களால் இத்தகைய முக்கியமான செயற்பாடுகள் பல எடுக்கப்பட்டிருந்தாலும், மனித வளத்துக்குள் பிரவேசிப்பதற்கும், பொருளாதார சுயாதீனத்தை மேம்படுத்துவதற்கும் தடைகள் ஏற்படும் சந்தர்ப்பங்கள் நாட்டில் நிலவின. ஏனைய நிறுவனங்களுக்கு முன்மாதிரியாக Airtel நிறுவனத்துடன் ஏற்படுத்திக் கொண்ட இந்த ஒத்துழைப்பு நாம் வரக்காரணம் ஏனைய நிறுவனங்களை விட இங்கு மாற்றுத்திறன் கொண்டவர்களுக்கு பணியாற்ற சிறந்த சூழல் காணப்படுகின்றமையே” என கூறினார்.

தொலைத்தொடர்புகள் சேவை துறையில் விற்பனை மற்றும் வாடிக்கையாளர்கள் நடத்தை தொடர்பாக புரிந்துகொள்ள சந்தர்ப்பத்தை வழங்கி அந்த பிரிவு தொடர்பாக அடிப்படை கவனத்தை செலுத்தி பயிற்சிகள் வழங்கப்படும். நிறுவனத்தின் தேவைகளை முழுமைப்படுத்துவதற்கு அமைய பயிற்சிகளுக்காக கலந்துகொள்பவர்கள் நிறுவனத்தின் சேவையில் ஈடுபடுத்திக் கொள்ள Airtel நிறுவனம் எதிர்பார்க்கின்றது.

“Alive , Inclusive and Respectful” என்ற பெறுமதியான வாசகத்தை முன்னிலைப்படுத்தி செயற்படுகின்ற Airtel நிறுவனம், இந்த பயிற்சி செயற்திட்டம் மூலம் நிறுவனம் சமூகத்தின் அனைவருக்கும் சமமான வாய்ப்பை ஏற்படுத்தி கொடுக்கின்றது என்பதற்கு சான்று பகருகின்றது.

படம்

Airtel நிறுவனத்தின் முகாமைத்துவ பணிப்பாளரும் பிரதம நிறைவேற்று அதிகாரியுமான ஜினேஷ் ஹெக்டே மற்றும் EFC பணிப்பாளர் நாயகம் கனிஷ்க வீரசிங்க ஆகியோர் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும்போது